# இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல்

*உயிர்த்தெழுதலைச் சுற்றிலும் பல இரகசியங்கள்/அறிய இயலாத விஷயங்கள் உள்ளன. இயேசுவின் உயிர்த்தெழுந்த உடல் என்பது ஒரு சிறிய இரகசியமாக உள்ளது.*

*முதலாவதாக, அது ஒரு உடலாக இருந்தது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உயிர்த்தெழுந்த கர்த்தர் என்பவர் அப்போஸ்தலர்களின் கற்பனையில் ஏற்பட்ட புனைசுருட்டாக இருந்ததில்லை என்று ஒவ்வொருவரும் அறியவேண்டும் என்று அவர்கள் விரும்பினர். அவர்கள் கனவோ அல்லது தரிசனமோ கண்டிருக்கவில்லை. அவர்கள் ஒரு ஆவியையோ அல்லது ஆவேசத்தையோ கண்டிருக்கவில்லை. இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, காணக்கூடிய உடல் ஒன்றைக் கொண்டிருந்தார் (யோவா. 20:14, 20; அப். 10:40). அவர் "மாம்சமும் எலும்புகளும்" உடைய உடல் ஒன்றைக் கொண்டிருந்தார் (லூக். 24:39). அவர் பூமியின்மீது நடந்த (லூக். 24:15), தொடக்கூடிய (மத். 28:9; லூக். 24:39) ஒரு உடலைக் கொண்டிருந்தார். அவர் பேசக்கூடிய (லூக். 24:17), உணவு உண்ணக்கூடிய (லூக். 24:41-43; அப். 10:41) ஒரு உடலைக் கொண்டிருந்தார். சிலுவையில் அவர் பட்ட பாடுகளின் காயங்களைத் தக்க வைத்திருந்த ஒரு உடலைக் கொண்டிருந்தார் (யோவா. 20:20, 25, 27).*

*அதே வேளையில், அது வழக்கத்திற்கு மாறான ஒரு உடலாக இருந்தது. மூடப்பட்டு, பூட்டப்பட்டிருந்த கதவுகளுக்குப் பின்னால் அப்போஸ்தலர்கள் ஒளிந்திருந்தபோது, இயேசு திடீரென்று "அவர்கள் நடுவிலே" நின்றார் (யோவா. 20:19, 26). அவரது உடல், திடமான மரத்தினூடே நடந்து செல்லக் கூடியதாயிருந்தது என்பதே மறை கருத்தாக உள்ளது![1] ஹோமர் ஹெய்லி என்பவர் பின்வருமாறு எழுதினார்:*

> *[யோவா. 20:19, 26ல்] உள்ள மூடிய என்ற வார்த்தையானது kleio என்ற வார்த்தையில் இருந்து வருகிறது, இது "மூடிய, பூட்டிய, தாழிடப்பட்ட" என்று அர்த்தப்படுகிறது* (Arndt and Gingrich[2]). *புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தையின் வழக்கமான பயன்பாடு, மூடப்பட்ட மற்றும் திறக்கப்பட முடியாத, எனவே பூட்டப்பட்ட அல்லது தாழிடப்பட்ட சிலவற்றைப் பற்றிய கருத்தைச் சுட்டிக்காண்பிக்கிறது (மத். 25:10; லூக். 11:7; அப். 21:30; வெளி. 3:7, 8; 20:3; 21:25ஐக் காணவும்). இந்த விவரமானது, இயேசு கதவுகளினூடே பிரவேசிக்காதிருந்தும், அறைக்குள் அவர் திடீரென்று தோன்றியதைச் சுட்டிக் காண்பிக்கிறது.[3]*

*கிலெயோப்பாவும் அவரது துணையாளியும் இயேசுவை அடையாளம் கண்டுகொண்ட வேளையில், "அவர் அவர்களுக்கு மறைந்துபோனார்" (லூக். 24:31). ஜான்* F. *கார்ட்டர் அவர்கள், "இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, அவரது உடலானது, அவரது மரணத்திற்கு முன்பு கொண்டிராத அல்லது வல்லமைகளை செயல்முறைப்படுத்தாத தன்மைகளை கொண்டிருந்து அவற்றைச் செயல்முறைப்படுத்தியது" என்று எழுதினார்.*[4] *கொடுக்கப்பட்ட உதாரணங்களுடன் கூடுதலாக, கார்ட்டர் அவர்கள், "தனிநபர்கள் அல்லது குழுக்களுக்கு குறுகிய நேரங்கள் அவர் தரிசனமான வழிமுறை மற்றும் யாரேனும் ஒருவருக்குத் தரிசனமாகும் முன் சில நாட்களுக்குச் சாத்தியமான வகையில் காணப்பட முடியாதிருந்த வழிமுறை" என்பவற்றை உள்ளடக்கினார்.*[5]

*இயேசுவின் உடலானது தோற்றத்தில் ஏதோ ஒரு வகையில் மாறுபட்டதாயிருந்தது அல்லது அவர் தமது தோற்றத்தைத் தமது நோக்கத்திற்குப் பயன்படும் வகையில் மாற்ற முடிந்திருந்தது என்பதற்கும் சாத்தியக் கூறுள்ளது.*[6] *மாற்கு 16:12ன்-படி, அவர் எம்மாவு செல்லும் வழியில் இரண்டு பேருக்கு "மறுரூபமாய்த் தரிசனமானார்." சில மொழிபெயர்ப்புக்களில் இது "இன்னொரு வடிவில்" என்றுள்ளது* (RSV). The New Century Version *என்ற வேதாகமம், "அவர் முன்புபோல் காணப்படவில்லை" என்று கூறுகிறது.* The New Living Translation *என்ற வேதாகமத்தில், "அவர் தமது தோற்றத்தை மாற்றிக் கொண்டார்" என்றுள்ளது. எவ்வகையிலும், இயேசுவின் மரணத்திற்கு முன்பு அவரை அறிந்திருந்தவர்கள் அவர் உயிர்ப்பிக்கப்பட்ட பின்பு முதலில் அவரை அடையாளம் கண்டுகொள்ளவில்லை (லூக். 24:16; யோவா. 20:14).*

*கார்ட்டர் அவர்கள், "அதில்* [*கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்தில்*] *அவர் இவ்வாழ்வில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரைப் பண்படுத்தக் கூடிய - அவரே கூட தமது மரணத்திற்கு முன்பு பண்படுத்தப் பட்டிருந்த - வரைமுறைகளுக்குக் கீழ்ப்பட்டிருக்கவில்லை" என்று முடிவு செய்தார்.*[7] *இராபர்ட் கல்வெர் அவர்கள், "அவரது உடலானது பரவச நிலையியலானதாக* [*eschatological*[8]], *அதாவது, மகிமைப்படுத்தப்பட்ட உடலாக மாற்றப்பட்டது" என்று எழுதினார்.*[9] *கல்வெரின் சொற்றொடராக்கம் "தம்முடைய மகிமையான சரீரத்திற்கு" என்று பேசுகிற பிலிப்பியர் 3:21ல் இருந்து வந்திருக்கலாம். "கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த உடலின் புதிய குணங்கள் மற்றும் வல்லமைகள், ஆவிக்குரிய சரீரம் என்று பவுல் அழைத்ததை (1 கொரி. 15:44) சந்தேகமின்றி குறிக்கின்றன"*[10] *என்று கார்ட்டர் அவர்கள் நம்பினார்.*

*இயேசுவின் உயிர்த்தெழுந்த உடலுக்கும், நமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு நாம் பெறவிருக்கும் ஆவிக்குரிய உடல்களுக்கும் இடையில் ஒரு நெருங்கிய உறவு நிலவலாம். இங்கு, ஆவிக்குரிய உடல் பற்றி பவுல் போதித்தவற்றின் தொகுப்புரையொன்று தரப்படுகிறது: நாம் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படும்போது, உருவமற்ற ஆவிகளாயிருக்க மாட்டோம், ஆனால் புதிய உடல்களைப் பெற்றுக்கொள்ளுவோம் (2 கொரி. 4:16-5:4ஐக் காணவும்).*[11] *உயிர்த்தெழும் சரீரத்தைப் பவுல் 1 கொரிந்தியர் 15ல் (வ. 35ஐக்*

காணவும்) விவரித்தார். புதியதான, "ஆவிக்குரிய" சரீரமானது ஏதோ ஒரு வகையில் பழைய "இயல்பான" சரீரத்துடன் தொடர்புபடுத்தப் பட்டிருக்கும் (வ. 38-41). விதையை விதைத்தல் என்ற ஒப்புவமையைப் பயன்படுத்திய பவுல் பின்வருமாறு எழுதினார்:

> மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும்; அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக் கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக் கும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக் கும்; ஜென்ம சரீரமுமுண்டு; ஆவிக்குரிய சரீரமுமுண்டு (வ. 42-44).

கிறிஸ்து திரும்ப வரும்போது, நாம் மரித்திருந்தாலும் அல்லது இன்னமும் உயிருடன் இருந்தாலும் நமது உடல்கள் "மாற்றப்படும்" (வ. 51-54). அதாவது, நீங்களும் நானும் நமது உயிர்த்தெழுந்த உடல்களைப் பெற்றுக்கொள்வோம்.

நாம் பெற்றுக் கொள்ளவிருக்கும் ஆவிக்குரிய உடல்களுக்கும், இயேசுவின் உயிர்த்தெழுந்த உடலுக்கும் இடையில் இணைவுகளைக் காணமுடியும் - ஆனால் தெளிவாகத் தோன்றும் ஒரு வித்தியாசத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். இயேசுவின் உயிர்த்தெழுந்த உடலானது "மாம்சமும் எலும்புகளும்" உடையதாக இருந்ததென்று அவரே வலியுறுத் தினார் (லூக். 24:39), அதே வேளையில் பவுல், "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது" (அதாவது, பரலோகத்தில் பிரவேசித்தல்) என்று எழுதினார் (1 கொரி. 15:50). ஒருவேளை இயேசு, "மாம்சமும் எலும்புகளும்" என்ற வார்த்தைகளை, "உடல்" என்பதைக் குறிப்பதற்காக மட்டும் வளைந்து கொடுக்கும் வகையில் பயன்படுத்தியிருக்கலாம்.[12] அந்த நாற்பது நாட்களில் இயேசு பயன் படுத்தியிருந்த உடல் என்பது அவரது நிறைவான மகிமையுள்ள உடலின் தழுவப்பட்ட பதிப்பாக - அவர் தாம் பரலோகத்திற்கு ஏறிச் செல்லும் செயலுக்குத் தமது சீஷர்களைத் தயார் செய்கையில், அவர்களுடன் உரையாடி உறவாடுவதற்காகத் தழுவப்பட்ட உடலாக - இருந்திருக்கக் கூடிய இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. அப்படியென்றால், மகிமைப் படுத்தப்பட்ட அவரது உடலின் கடைசியான மற்றும் முழுமையான மாற்றங்கள், அவர் தமது பிதாவினிடத்தில் ஏறிச் சென்றபோது வந்திருக்க வேண்டும்.[13]

அதைக் கூறியுள்ள நிலையில், நாம் உயிர்த்தெழுந்த இயேசுவின் உடலைப் பற்றி அறியக்கூடியது என்ன? அது வழக்கத்திற்கு மாறான ஒரு உடலாக இருந்தது, ஆனால் அது ஒரு மெய்யான உடலாய் இருந்தது. அவர் மரித்தோரிலிருந்து உண்மையாகவே உயிர்ப்பிக்கப்பட்டார் என்று நாம் விசுவாசத்தினால் அறிகின்றோம். அதுவே பொருட்படுத்தப்படக் கூடியதாக உள்ளது.

குறிப்புகள்

[1]இயேசு கதவைத் தட்டினார் என்றும் யாரோ ஒருவர் அவரை உள்ளே அனுமதித்தார் என்றும் சிலர் நம்புகின்றனர். அப்படிப்பட்ட உலகம் சார்ந்த/இகபோக பிரவேசமானது, லூக்கா 24:36, 37ல் குறிப்பிடப்பட்ட பதில்செயலை மிக அரிதாகவே உண்டாக்கியிருக்கும். [2]Hailey's reference is to Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957). [3]Homer Hailey, *That You May Believe: Studies in the Gospel of John* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 145. [4]John Franklin Carter, *A Layman's Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 341. [5]Ibid. [6]சில வேளைகளில், அவரது தெய்வீகத்துவமானது மறுரூபத்தின்போது போல் "காண்பிக்கப்பட்டதா"? [7]Carter, 341. [8]"Eschatology" என்பது "கடைசி (*eschatos*) விஷயங்களைப் பற்றிய படிப்பு (*logos*)" என்பதாக உள்ளது (அதாவது, உலகத்தின் முடிவு, நியாயத்தீர்ப்பு, பரலோகம் மற்றும் நரகம் முதலியவற்றின் படிப்பாக உள்ளது). "Eschatological" என்ற வார்த்தையின் முடிவானது "அதற்குரிய" என்று அர்த்தப்படுகிறது. "Eschatological" உடல் என்பது, "கடைசியில்" கிறிஸ்து வரும்போது நாம் பெற்றுக்கொள்ளவிருக்கும் உடலின் வகையாக உள்ளது. [9]Robert Duncan Culver, *The Life of Christ* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 267. [10]Carter, 341.

[11]ஆவிக்கும் ஆவிக்குரிய உடலுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை நான் அறிவதில்லை, ஆனால் நமது ஆவிகள் முழுமையாகச் செயல்படவும் தங்கள் நித்திய அடைவிடத்தின் பணிகளை நிறைவேற்றவும் உடல்களைக் கொண்டு "உடுத்துவிக்கப்பட" வேண்டியது அவசியம் என்பது உறுதி. [12]The Living Bible என்ற வேதாகமப் பொழிப்புரையில் லூக்கா 24:39, "... Touch me an make sure that I am not a ghost! For Ghosts on't have bodies, as you see that I o!" என்று கூறப்படுகிறது. [13]பரத்துக்கேறுதல் பற்றி அதிகமான கருத்துக்களை இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள, "சென்று வருகிறோம் மற்றும் ஹலோ" மற்றும் "மகிமையில் எடுத்துக் கொள்ளப்படுதல்" என்ற பாடங்களில் காணவும்.